# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1725/29 - 2011 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා - 2011.09.30

*1725/29 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க**
**நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தற்போது பொது நூல் நிலையத்திற்குப் பயன்படுத்தப்படும் இடப்பகுதியும், நினைவுச் சின்னத்திற்கும் அதன் கொண்டாட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடப்பகுதியும் தவிர்ந்த, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணியினை 2011 ,செத்தெம்பர் 29 ஆந் திகதி தொடக்கம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாக்க இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*பாதுகாப்பு அமைச்சர்.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,*
*கொழும்பு 03,*
*2011, செத்தெம்பர் 29.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள, கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அடங்கியுள்ளதும், கறுவாத்தோட்ட வட்டாரத்திற்குள் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் 1948, பெப்புருவரி 18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முடிக்குரிய காணி மாதிரிப்பட இல. 2 இல் காணி இல. 1 எனக் காட்டப்பட்டுள்ளதும், தற்போது பொது நூல்நிலையத்திற்குப் பயன்படுத்தப்படும் இடப்பகுதியும், நினைவுச் சின்னத்திற்கும் அதன் கொண்டாட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடப்பகுதியை தவிர்ந்ததும் வடக்கே தர்மபால மாவத்தையையும் (ரறட் வீதி), எப். ஆர். சேனாநாயக்க மாவத்தையையும் ; கிழக்கே டாக்டர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தையையும்; தெற்கே ஆனந்த குமாரசுவாமி மாவத்தையையும் ; மேற்கே சேர் மார்கஷ் பர்னாந்து மாவத்தையையும் எல்லைகளாக கொண்டுள்ளதும், பரப்பளவில் (அண்ணளவாக) ஐம்பத்திநான்கு ஏக்கர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணி.*

*10- 382*